வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 21.03.2026 சனிக்கிழமை இதழ் : 74 பக்கங்கள் : 08

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கமுடியாது!



## அரசு திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் எவ்விதமான சர்வதேச விசாரணைகளையும் முன்னெடுப்பதை அரசு கடுமையாக எதிர்ப்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்களின் எண்ணிக்கை குறித்து அமைச்சர் உரையாற்றுகையில், "2009ஆம் ஆண்டு போரின் இறுதிக்கட்ட காலப்பகுதியில் சுமார் 2 ஆயிரத்து 764 பேர் காணாமல்போயுள்ளனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன. எனினும், இந்த எண்ணிக்கை விவாதத்துக்குரியது. காணாமல் போனவர்கள் தொடர்பான துல்லியமான தரவுகள் தற்போது எமது வசம் இல்லை." - என்றார்.

போர்க் காலப்பகுதியில் இரு தரப்பினருமே இத்தகைய

07

## காணாமல்போன விரிவுரையாளரின் மகளும், மருமகனும் பிடிபட்டனர்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் - அரியாலை, புங்கன்குளம் பகுதியிலுள்ள வீட்டில் இருந்து கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் காணாமல் போனதாகக் கூறப்படும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருடன் காணாமல்போன அவரது மகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், விரிவுரையாளரைத் தேடும் பணிகள் தொடர்கின்றன.

07

## சர்வதேச சட்டமீறல்களை கண்டிக்க அரசுக்கு அச்சம்!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 21


சர்வதேச சட்டங்களை மீறி முன்னெடுக்கப்படும் தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரை ஏன் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை வெளியிடவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈரான் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலில் இலங்கை நடுநிலை

07

# அமெரிக்காவுக்கோ, ஈரானுக்கோ நாம் ஆதரவில்லை நடுநிலைமையே எமது உறுதியான நிலைப்பாடாகும்!

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி விசேட உரை



கொழும்பு, மார்ச் 21

"மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலில், இலங்கை எவரொருவருடனும் பக்கச் சார்பாக நடந்து கொள்ளாது. எமது நிலைப்பாடு நடுநிலமையே ஆகும். அமெரிக்காவுக்கோ, ஈரானுக்கோ ஆதரவான நிலைப்பாடு எதுவும் எம்மிடமில்லை. எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும், இந்த நடுநிலைத்தன்மை கை நழுவிப் போக நாம் இடமளிக்க மாட்டோம்" என்றும்,

எமது தாய்நாட்டின் கௌரவம், நீதி மற்றும் சர்வதேச அங்கீகாரம் ஆகியவற்றை எமது நடுநிலைத்தன்மையைப் பாதுகாப்பதன் மூலமே நாம் வென்றெடுக்க

07

## வடமாகாண அபிவிருத்திப் பணிகளை எவ்வித தொய்வுமின்றி செயற்படுத்துக!

### அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள மிகப் பெரிய நிதியொதுக்கீடுகளைக் கருத்திற் கொண்டு, மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளை எவ்விதத் தொய்வுமின்றியும், தடங்கலின்றியும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

07

## ஜனாதிபதி - மனோ வாக்குவாதம்

கொழும்பு, மார்ச் 21

பாராளுமன்றத்துக்கு வெளியேயும் எதிர்க்கட்சி இருக்கின்றது என ஜனாதிபதி நேற்று தனது பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டார். இதன்போது ஜனாதிபதிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

"ஒரு தருணத்தில், அரசாங்கம் அமெரிக்காவுடன் இணைந்திருக்கவில்லை என்று அரசை குற்றம் சாட்டும் எதிர்க் கட்சி, மற்றொரு தருணத்தில் ரஷ்யாவுடன் இணைந்திருக்கவில்லை என்றும்

07

## அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 21

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, சதொச விற்பனை நிலை யங்கள் ஊடாக வழங்கப்படும் பல அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, இந்த விலைக்குறைப்பு தொடர்பான விபரங்களை வெளியிட்டார்.

இதன்படி, வெள்ளை நாடு அரிசி, வெள்ளை அரிசி, கோதுமை மா, பருப்பு, நெத்தலி மற்றும்

07

## கலைப்பீட பீடாதிபதியாக பேராசிரியர் பிரதீபராஜா!



யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இன்று முதல் தொடர்ந்து வரும் மூன்று வருடங்களுக்குச் செயற்படும் வகையில் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா கலைப் பீடச் சபை

07

## வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் சீரான மருத்துவ சேவைகள் இல்லை!

### கண்டித்து இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் சீரான சேவைகள் இல்லாத காரணத்தால் அவற்றை சீர் செய்யுமாறு கோரி இன்று காலை 8.00 மணிக்கு வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வைத்தியசாலைக்கு தாதியர் இன்மை, 24 மணி நேர சேவையின்மை, நோயாளர் காவு வண்டியை

07

## தடையற்ற மின்சாரம் வழங்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம்!

கொழும்பு, மார்ச் 21

தடையற்ற மின்சாரத்தை வழங்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்றும், அதற்காக எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், உலகச் சந்தையில் நிலக்கரி உள்ளிட்ட அனைத்துப்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரம் இலங்கை வரும் சர்வதேச நாணய நிதியக் குழு!

## 5ஆம், 6ஆம் கட்ட மதிப்பீடுகளை நிறைவு செய்வதற்கு திட்டம்

ஜெனீவா, மார்ச் 21

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் குழுவினர் எதிர்வரும் 26 முதல் ஏப்ரல் 09 வரை இலங்கைக்கு வருகை தருவார்கள் என நாணய நிதிய தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜூலி கோசாக் அறிவித்துள்ளார்.



சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுத் திட்டத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஒருங்கிணைந்த மீளாய்வை நிறைவு செய்வதையும், மத்திய கிழக்கு மோதலின் பொருளாதாரத் தாக்கத்தை மதிப்பிடுவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த விஜயம் அமையவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விஜயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இலங்கையின் பொருளாதாரம் ஒப்பீட்டளவில் வலுவாக வளர்ந்து வருகிறது.

உண்மையில், 2025 ஆம் ஆண்டில் அது 5 சதவிகிதம் வளர்ச்சி கண்டது.

2026 பெப்ரவரி மாதத்தில் பணவீக்கம் சுமார் 1.6 சதவிகிதமாக இருந்தது.

கடன் மறுசீரமைப்பு ஏறக்குறைய நிறைவடைந்துவிட்டது, மேலும் மொத்த சர்வதேச கையிருப்புகள் கணிசமாக அதிகரித்து வருகின்றன.

எனினும் முன்பே குறிப்பிட்டபடி, வர்த்தகப் பணப் பரிமாற்றங்கள் மற்றும் சுற்றுலா வழிகள் மூலம் மத்திய கிழக்கில் நிலவும் மோதலுக்கு இலங்கை கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இது, இலங்கையின் எதிர்காலம் குறித்த அதன் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஒரு சுமையாக அமைகிறது.

பொருளாதாரக் கொள்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு குழு மார்ச் 26 முதல் ஏப்ரல் 9 வரை இலங்கைக்கு வருகை தரும் என எதிர்பார்க்கிறோம்.

அங்கு, இத்திட்டத்தின் கீழ் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஒருங்கிணைந்த மீளாய்வை நிறைவு செய்வதே அதன் நோக்கமாக இருக்கும்.

மேலும், அந்தக் கலந்துரையாடல்களின் ஒரு பகுதியாக, மத்திய கிழக்கு மோதலானது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கம் என்ன என்பதை நன்கு புரிந்துகொள்வதற்காக, அக்குழுவினர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார்கள்.

அக்குழுவினர் திரும்பி வரும் போது, இலங்கையின் பொருளாதாரம் குறித்த ஒரு புதுப்பிக்கப்பட்ட மதிப்பீட்டையும், சர்வதேச நாணய நிதியம் எவ்வாறு இலங்கைக்குத் தொடர்ந்து சிறந்த முறையில் ஆதரவளிக்க முடியும் என்பது குறித்த தகவல்களையும் கொண்டிருப்பார்கள்- என்றார். (அ)

# இ.போ.ச.டிப்போக்கள் மூலம் தனியார் பஸ்களுக்கு டீசல்!

கொழும்பு, மார்ச் 21

இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்கள் ஊடாக தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்கும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடு முழுவதும் உள்ள 107 டிப்போக்களில் 103 டிப்போக்கள் ஊடாக இந்த எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் சுஜீவ கனகரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு, தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பேருந்துகளுக்கு மாத்திரமே இந்த நடைமுறையின் கீழ் எரிபொருள் வழங்கப்படவுள்ளது.

எனவே, தனியார் பஸ் உரிமையாளர்கள் தமது வாகனங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிலோ அல்லது அந்தந்த மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையிலோ பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், தகுதியுள்ள பேருந்துகள் தமக்கு ஒதுக்கப்பட்ட டிப்போக்களில் இருந்து தடையின்றி எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 16 மோ. சைக்கிள் பாகங்கள் பறிமுதல்

கொழும்பு, மார்ச். 21

சுங்க வரி செலுத்தாது நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மோட்டார் சைக்கிள் பாகங்களுடன் வெல்லம்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, நுகேகொடை வலய குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சட்டவிரோதமான முறையில் வரியின்றி நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 16 மோட்டார் சைக்கிள் பாகங்கள் கைப்பற்றப்பட்டன. (எ)

# கட்டைக்காட்டில் வீடுகள், மரங்களை அழித்து நாசம் புரிந்த 5 யானைகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சுண்டிகுளம் பகுதியில் நேற்று இரவு 5 யானைகள் வீடுகள் மற்றும் கரைவலைவாடிகளில் காணாப்பட்ட தென்னை மரம் உட்பட பயன்தரும் மரங்களை அழித்துள்ளன.

குறித்த சம்பவம் அப்பகுதியில் பலத்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

யானைகளை வேறு இடங்களிலிருந்து கொண்டுவந்து இறக்கிவிடப்பாட்டிருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கில் சுண்டிகுளத்திலிருந்து வெற்றிலைக் கேணி வரை வன ஜீவ ராசிகள் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் அப் பிரதேசங்களில் இதுவரை யானைகள் அங்கு காணப்பாட்டிருக்கப்படவில்லை.

இந் நிலையில் குறித்த யானைகள் வேறு இடங்களிலிருந்து கொண்டுவந்து இறக்கிவிடப்பாட்டிருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# கொலை சம்பவத்தின் துப்பாக்கிதாரி கைது

கொழும்பு, மார்ச். 21

கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய உதவியாளர்களில் ஒருவரான ஆமி உபுல், ராகம பட்டுவத்த பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பல முக்கிய தகவல்களை பொலிஸார் வெளிப்படுத்தினர்.

கடந்த ஆண்டு ஜூலை 3ஆம் திகதி, ஓட்டோவில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் இவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவினர் நடத்திய விசாரணையில், கடந்த 17ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த துப்பாக்கிதாரிக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கிய மற்றும் அதற்கு உதவிய மற்றுமொரு சந்தேகநபர் கடந்த 18ஆம் திகதி மாதம்பை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்தச் சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த மார்ச் 7ஆம் திகதி ஜா-எல பகுதியில் உள்ள வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துக்கும் அவர் உடந்தையாக இருந்தது தெரியவந்துள்ளது.

இதன்படி, அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போரா 12 ரக துப்பாக்கி ஒன்று, 14 தோட்டாக்கள் மற்றும் போலி இலக்கத் தகடுகளைக் கொண்ட மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இந்த இரு சந்தேகநபர்களும், கடந்த ஆண்டு ஜூலை 14ஆம் திகதி மாதம்பை பகுதியில் நபரொருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தி பலத்த காயம் ஏற்படுத்திய [illegible] தெரியவந்துள்ளது. (எ)

# மகிந்த ராஜபக்ஷவின் பெயர் அச்சுறுத்தலால் கூறப்பட்டது

## கபில சந்திரசேன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 21

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தம்மை அச்சுறுத்தி வாக்குமூலம் பெற்றதாக, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன தெரிவித்தார்.

அவர் ஒரு சத்தியக்கடதாசியை சமர்ப்பித்தே இதனைத் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளரால் விடுக்கப்பட்ட மிரட்டல்களினால் ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தலை பயன்படுத்தி, வாக்குமூலம் பதிவு செய்த அதிகாரியால் இந்த அறிக்கை பெறப்பட்டதாக கபில சந்திரசேன கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களோ அல்லது அவர்களின் செல்வாக்கு குறித்த தகவல்களோ அந்த வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், அவை தன்னால் தன்னார்வமாக வழங்கப்பட்டவை அல்ல என அவர் அந்த சத்தியக் கடதாசியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எயார் பஸ் கொடுக்கல் வாங்கலின் போது முன்னாள் ஜனாதிபதிக்கு இருவேறு சந்தர்ப்பங்களில் இலஞ்சம் வழங்கப்பட்டதாக கபில சந்திர சேன தமது வாக்குமூலத்தில் கூறியுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் சபாநாயகருடன் கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் கீழ் இலங்கை பாராளுமன்றத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள பயிற்சித் திட்டங்கள் குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

பாராளுமன்றத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்தின் பணிகளை வலுப்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட தொடர் பயிற்சித் திட்டங்கள் மற்றும் திறன் விருத்தி முயற்சிகள் குறித்து கௌரவ சபாநாயகருக்கு விளக்கமளிப்பது மற்றும் அவரின் ஒப்புதலைப் பெறுவது இச்சந்திப்பின் நோக்கமாக அமைந்தது.

அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையைச் சேர்ந்த அமெரிக்க காங்கிரஸ் அதிகாரிகள் குழுவினர் 2025ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் குறித்தும் இங்கு நினைவு கூரப்பட்டது.

இக்குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியதுடன், மேற்பார்வை மற்றும் பொது நிதி தொடர்பில் பாராளுமன்றத்திற்குக் காணப்படும் பொறுப்புக்களை சிறப்பாக மேற்கொள்வதற்கான திறனை மேம்படுத்துவதற்கான ஆர்வத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்களின் அடிப்படையில் இலங்கைப் பாராளுமன்றத்திற்குப் பயிற்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நிபுணர்கள் தலைமையிலான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமை ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
21.03.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ்நாடு தேர்தல் குறித்து எழும் முக்கிய கேள்விகள்

மத்திய கிழக்கின் போர் மற்றும் அதன் விளைவான உலகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கூட, இலங்கைத் தமிழர்களின் கவனத்தை ஈர்க்கும் வேறு விவகாரங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக தமிழ்நாடு சட்டசபை தேர்தலைக் கூறமுடியம்.

அந்த தேர்தலில் வாக்குப்பதிவு ஏப்ரல் 23 ஆம் திகதியும் வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் திகதியும் இடம்பெறவிருப்பதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது.

இந்த தடவை தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் மூன்று விடயங்கள் முக்கியமாக அவதானிப்புக்கு உள்ளாகின்றன.

ஆளும் திராவிட முன்னேற்றக்கழகம் அதன் வரலாற்றில் இதுகால வரையில் ஒருபோதுமே அடுத்தடுத்து தேர்தல்களில் வெற்றி பெற்று மாநிலத்தில் ஆட்சியை அமைத்ததில்லை. தந்தையார் கலைஞர் கருணாநிதி செய்ய முடியாமல் போனதை தனயன் ஸ்டாலினால் சாதித்துக்காட்ட முடியுமா என்ற கேள்விக்கு இந்த தேர்தல் பதில் தரும். முன்னொருபோதும் இல்லாத வகையில் 24 கட்சிகளுடன் கூட்டணியமைத்து தி.மு.க. போட்டியிடுகிறது.

சினிமாவைப் போன்றே அரசியலிலும் பிரகாசித்த இரு பிரமாண்டமான ஆளுமைகளான எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் தலைமையில் தமிழ்நாட்டை பல தடவைகள் ஆட்சி செய்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய ஜனவசியமிக்க தலைவர்கள் இல்லாத நிலையில் தொடர்ந்தும் மாநிலத்தில் செல்வாக்குமிக்க அரசியல் சக்தியாக எவ்வளவு காலத்துக்கு நீடிக்க முடியும் என்பது இரண்டாவது கேள்வி.

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்து களமிறங்கியிருக்கும் அண்ணா தி.மு.க.வின் தேர்தல் வாய்ப்புக்கள் இந்த கேள்விக்கு பதிலைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

மாநிலத்தில் பெரும் இரசிகர் பட்டாளத்தைக் கொண்ட நடிகர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் பிரவேசம் தமிழ்நாட்டு அரசியல் நிலக்காட்சியில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது மூன்றாவது கேள்வி.

சினிமா மூலமாக வளர்த்துக்கொண்ட மக்கள் (இரசிகர்கள்) செல்வாக்கில் நம்பிக்கை வைத்து அரசியல் களத்தில் குதிக்கும் நடிகர்கள் சகலருமே எம்.ஜி. ஆர். ஆகிவிடமுடியாது என்பதற்கு தமிழ்நாட்டின் அண்மைய வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு.

சிறந்த நடிப்பாற்றல் வெற்றிகரமான அரசியல் வாழ்க்கைக்கு உத்தரவாதத்தை தருவதில்லை என்பதற்கு நடிகர்திலகம் சிவாஜி கணேசனும் கமல்ஹாசனும் பிரகாசமான உதாரணங்கள். அதே போன்றே அரசியலில் வெற்றிபெற்ற நடிகர்கள் சிறந்த நடிப்பாற்றலைக் கொண்டவர்களாக விளங்கினார்கள் என்றும் கூறிவிட முடியாது. சினிமாவில் இருந்து தமிழ்நாட்டு அரசியல் களத்துக்கான பிந்திய வரவாக இன்று கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கும் விஜய்யை பார்க்க வரும் பெரும் மக்கள் கூட்டம் தேர்தல்களில் வாக்குகளாக மாறப் போவதில்லை என்று இனிமேலும் கூறமுடியாது. அவரின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைப்பதற்கு அண்ணா தி.மு.க. மற்றும் பாரதிய ஜனதா போன்ற பெரிய கட்சிகள் காட்டிய ஆர்வம் இதற்கு ஒரு சான்று.

எம்.ஜி. ஆர். போன்று மாநில சட்டசபைத் தேர்தலில் ஆளும் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு முன்னதாக ஏதாவது ஒரு இடைத்தேர்தலில் என்றாலும் போட்டியிட்டு பெரிய வெற்றியைப் பதிவுசெய்து தனது மக்கள் செல்வாக்கை நிரூபிக்காமல் விஜய் நேரடியாக சட்டசபைத் தேர்தலிலேயே தனது பலத்தை பரீட்சித்துப் பார்க்கப்போகிறார். எது எவ்வாறிருந்தாலும், தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் இந்த தடவை மும்முனைப் போட்டியாகவே விளங்கப் போகிறது என்று பெரும்பாலான இந்திய ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

சுமார் ஆறு தசாப்த காலமாக கூட்டணி அரசியலே பாரம்பரியமாக வலுப்பெற்றுவிட்ட தமிழ்நாட்டு அரசியல் களத்தில் விஜய்யின் கட்சி தனித்துப் போட்டியிடுவது பிரதான திராவிட கட்சிகளான தி.மு.க. மற்றும் அண்ணா தி.மு க. தலைமையிலான கூட்டணிகளில் எதற்கு வாய்ப்பாக அமையும் என்பதே முக்கியமான கேள்வி. டானால்ட் ட்ரம்பும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாகுவும் எதிர்பார்த்திராத வகை

# எரிபொருள் நிலையங்களுக்கு இன்றும் நாளையும் விநியோகம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

*கொழும்பு, மார்ச் 21*

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தடையின்றி எரிபொருள் விநியோகிக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இன்று சனிக்கிழமை எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நிறுத்தப்படவுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானது என கூட்டுத்தாபனத்தின் நிர்வாக பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

சாதாரண நடைமுறையின்படி, ஒவ்வொரு மாதமும் ஒரு சனிக்கிழமை கூட்டுத்தாபனம் மூடப்படுவது வழமையாகும். எனினும், தற்போதைய தேவையைக் கருத்திற் கொண்டும், இன்று இரவு கியூ.ஆர் குறியீட்டு முறைமை மீளமைக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூட்டுத்தாபனம் திறந்திருக்கும் எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

தேவை ஏற்படின் ஞாயிற்றுக்கிழமையும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாகவும், இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையங்கள் நிறுவனமும் சனிக்கிழமை பணிகளைத் தொடரத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஈரானில் இதுவரை 3100 பேர் பலி!

*வாஷிங்டன், மார்ச். 21*

அமெரிக்கா - இஸ்ரேல் முன்னெடுத்த தாக்குதலை தொடர்ந்து ஈரானில் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை தளமாக கொண்ட மனித உரிமைகள் ஆர்வலர்களின் செய்தி நிலையம் இந்த புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. பெப்ரவரி 28 ஆம் திகதி போர் ஆரம்பமானது முதல் இதுவரையில் ஈரானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,186 ஆக அதிகரித்தது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 1,394 பேர் பொதுமக்கள் என்றும், அவர்களில் குறைந்தது 210 சிறுவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1,153 பேர் இராணுவத்தினர் என்றும், ஏனைய 639 பேரின் மரணங்கள் எவ்வகையைச் சேர்ந்தவை என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அந்த அமைப்பு வகைப்படுத்தியுள்ளது. (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பு: 448 சந்தேகநபர்கள் கைது

*கொழும்பு, மார்ச். 21*

நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 448 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 26, 844 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 16 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 253 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 161 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 174 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 43 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,043 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.(எ)

# போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் 852 பேர் கைது!

*கொழும்பு, மார்ச். 21*

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 852 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 15 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 852 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், 10 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட் டனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இதற்கமைய, சந்தேக நபர்களிடமிருந்து 431 கிராம் ஹெரோயின், 821 கிராம் ஐஸ், ஒரு கிலோ 197 கிராம் கஞ்சா, 1,428 கஞ்சா செடிகள், 05 கிலோ 148 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 08 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 197 போதை மாத்திரைகள், 14 கிலோகிராம் 419 கிராம் மதனமோதகம் மற்றும் 120 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன. (எ)

# கொலை சம்பவத்தின் துப்பாக்கிதாரி கைது

*கொழும்பு, மார்ச். 21*

கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய உதவியாளர்களில் ஒருவரான ஆமி உபுல், ராகம பட்டுவத்த பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பல முக்கிய தகவல்களை பொலிஸார் வெளிப்படுத்தினர்.

கடந்த ஆண்டு ஜூலை 3ஆம் திகதி, ஒட்டோவில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் இவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவினர் நடத்திய விசாரணையில், கடந்த 17ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த துப்பாக்கிதாரிக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கிய மற்றும் அதற்கு உதவிய மற்றுமொரு சந்தேகநபர் கடந்த 18ஆம் திகதி மாதம்பை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்தச் சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த மார்ச் 7ஆம் திகதி ஜா - எல பகுதியில் உள்ள வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துக்கும் அவர் உடந்தையாக இருந்தது தெரியவந்துள்ளது.

இதன்படி, அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போரா 12 ரக துப்பாக்கி ஒன்று, 14 தோட்டாக்கள் மற்றும் போலி இலக்கத் தகடுகளைக் கொண்ட மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் போது, ஆமி உபுல் கொலைக்கு உதவிய மற்றுமொரு சந்தேகநபர் நேற்று முன்தினம் வெள்ளம்பிட்டிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இந்த இரு சந்தேகநபர்களும், கடந்த ஆண்டு ஜூலை 14ஆம் திகதி மாதம்பை பகுதியில் நபரொருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தி பலத்த காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டுடனும் தொடர்புடையவர்கள் என தெரியவந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் மோதல்கள் வேண்டாமே. நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புதுவேலை கிடைக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் திறமைகள் வெளிப்படும்.

**மிதுனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உங்கள் கை ஓங்கும். புகழ் உயரும்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் இணைத்துப் பார்த்து கோபப்பட்டு கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை கடிந்து கொள்ளாதீர்கள். விழிப்புடண் செயல்பட வேண்டும்.

**கன்னி**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களை புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ள உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மகரம்**
துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தோற்றப்பொலிவு கூடும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். புத்துணர்ச்சி பெருகும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். பதறாமல் பக்குவமாக செயல்பட வேண்டிய நாள்.

# நயினாதீவில் மினி சூறாவளியால் இறங்குதுறை கொட்டகை சேதம்

யாழ்ப்பாணம், மார்ச். 21

நயினாதீவில் வீசிய மினி சூறாவளியால் இறங்குதுறை பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தகர கொட்டகை தூக்கி வீசப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சீரற்ற கால நிலைமை காணப்படுவதனால், பல பகுதிகளிலும் நேற்று வெள்ளிக்கிழமை காலை மழை பெய்தது.

இந்த நிலையில், தீவக பகுதியில் பலத்த காற்றும் வீசி வருவதனால், தீவகத்துக்கான படகு சேவைகள் தாமதப்பட்டுள்ளன.

இதேவேளை, நயினாதீவு பகுதியில் வீசிய காற்றினால் நயினாதீவு இறங்குதுறை பகுதியில் பக்தர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டிருந்த நிழற் கொட்டகைகள் சேதமடைந்தன.



## மன்னார், வவுனியா மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச். 21

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மன்னார், அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

இதேநேரம் மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(எ)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக் குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

## மருத்துவ முகாம்



யாழ்ப்பாணம், மார்ச். 21

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம் மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தற்போதைய காலத்தில் தொற்றா நோயினால் உடல், உள ஆரோக்கியம் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றமையால் உத்தியோகத்தர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நிகழ்வு எற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் மருத்துவர்களால் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மேலும் தொற்றா நோய்களான இரத்த சீனி மட்டம், உடற் திணிவு சுட்டி, வயிற்றுப்பருமன், இரத்த அழுத்தம், கருப்பை தொடர்பான பரிசோதனை ஆகிய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

(எ)

# வடமராட்சி கிழக்கில் யானைகள் அட்டகாசம்

## வனஜீவராசிகள் திணைக்களம் மீது சந்தேகம், பிரதேச மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், மார்ச். 21

வடமராட்சி கிழக்கு- கட்டைக்காடு, சுண்டிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 5 யானைகள் வீடுகள் மற்றும் கரைவலை வாடி பகுதிகளில் காணப்பட்ட தென்னை மரம் உட்பட பயன்தரும் மரங்களை அழித்தன. இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த யானைகளை வனஜீவராசிகள் திணைக்களம் வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்து இறக்கி விட்டிருக்கலாம் என்று பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் சுண்டிக்குளத்திலிருந்து- வெற்றிலைக் கேணி வரை வனஜீவராசிகள் திணைக்களத்துக்குட்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. இப் பிரதேசங்களில் இதுவரை யானைகள் காணப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில், குறித்த யானைகள் வேறு இடங்களிலிருந்து கொண்டுவந்து இறக்கிவிடப்பாட்டிருக்கலாம் என பிரதேச மக்கள் நம்புகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையிலிருந்து யானை ஒன்று கொண்டு வந்து இறக்கி விடப்பட்டது. இந்த யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்தார். இது தொடர்பான விசாரணை இப்போதும் நீடித்து வருகிறது.

(எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி எரிபொருள் வழங்க நடவடிக்கை

## பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன

கொழும்பு, மார்ச். 21

விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்கும் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், நாட்டின் அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான எரிபொருளை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று விவசாயத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"விவசாய அமைப்புகள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு தேவையான போதுமானளவு எரிபொருளை எரிபொருள் நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

பரல்களிலோ அல்லது கலன்களிலோ எவ்வாறாயினும் விவசாய சங்கங்கள் எரிபொருளை பெற்றுச் சென்று விவசாயிகளுக்கு வழங்க முடியும். அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விவசாய சமூகத்தினருக்கு எரிபொருள் வழங்குவதற்காக காணப்பட்ட சட்டம் தற்போது தளர்த்தப்பட்டுள்ளது. எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு கூபன் மற்றும் விவசாய அமைப்புகளின் உறுதிப்படுத்தல் மட்டுமே தேவையாக உள்ளது.

இந்த சட்டத்தை தளர்த்துவதற்கு முன்பதாக பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர், விவசாய அமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் உறுதிப்படுத்தல் அவசியமாக இருந்தது" - என்றார். (எ)

# கச்சா எண்ணெய் விலை நேற்று திடீரென வீழ்ச்சி

கொழும்பு, மார்ச். 21

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் யுத்தச் சூழல் காரணமாக கடந்த சில நாட்களாக அதிகரித்து வந்த உலக சந்தை கச்சா எண்ணெய் விலைகள், நேற்று வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி கணிசமாகக் குறைந்துள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் விலை 105. 82 அமெரிக்க டொலர்கள் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. நேற்று முன்தினம் இதன் விலை 115 டொலர் வரம்பைத் தாண்டியிருந்தது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ. கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 93. 43 டொலர்கள் வரை குறைந்துள்ளது. நேற்று முன்தினம் இதன் விலை 100 டொலர்களைக் கடந்திருந்தது.

மத்திய கிழக்கில் பதற்றங்கள் நீடித்த போதிலும், விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட சில சாதகமான மாற்றங்கள் மற்றும் உலகளாவிய தேவை குறித்த முன்னறிவிப்புகள் காரணமாக இந்த விலை சரிவு ஏற்பட்டுள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் கூறினர்.

எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கு, உலகச் சந்தையில் ஏற்பட்டுள்ள இந்த விலை வீழ்ச்சி ஓரளவு சாதகமானதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# இலஞ்ச ஊழல் விசாரணை பிரிவினரால் ஐவர் கைது

கொழும்பு, மார்ச். 21

மரப்பலகைகளை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காக இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில், தெஹியோவிட்ட வனவள திணைக்கள அலுவலகத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் மற்றும் மரக்காலை உரிமையாளர் உட்பட ஐவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக, மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

# முதலை இழுத்து சென்ற 9 வயது சிறுமி மரணம்!

அநுராதபுரம், மார்ச். 21

அநுராதபுரம் - மருதங்கடவலை, ஹினுக்கிரியாவ குளத்தில் குளிக்கச் சென்ற 9 வயது சிறுமி நேற்று முன்தினம் நண்பகல் முதலையால் இழுத்து செல்லப்பட்டு உயிரிழந்தார்.

சிறுமி தனது பாட்டியுடன் குளத்தில் குளித்துக்கொண்டிருந்த போதே இந்த சம்பவம் நேர்ந்தது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கிராமவாசிகள், பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இணைந்து குளத்தில் தேடுதல் நடத்திய போது, முதலை அச்சிறுமியை விட்டுவிட்டு சென்றது.

மீட்கப்பட்ட சிறுமி உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 18 வயது இளைஞன் கைது!

கொழும்பு, மார்ச். 21

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்தை பகுதியில், பெருமளவு ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் 18 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே, சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, 153 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 103 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன. (எ)

# பெற்றோலை அதிகளவில் பதுக்கியவருக்கு சிறை!

கொழும்பு, மார்ச். 21

பெற்றோல் விற்பனைக்கான முறையான அனுமதிப்பத்திரம் இன்றி, லொறி ஒன்றில் 65 லீற்றர் பெற்றோலை வைத்திருந்த நபருக்கு 2,500 ரூபாய் அபராதமும் 2 மாத கால கட்டாயச் சிறைத் தண்டனையும் விதித்து கல்கிஸை நீதிவான் உத்தரவிட்டார்.

வெள்ளவத்தை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இருந்து அதிகளவு எரிபொருளை பெற்றுக்கொண்டதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், லொறியில் இருந்த 4 எரிபொருள் கலன்களை பொலிஸார் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட எரிபொருளின் மொத்த மதிப்பு சுமார் 20, 000 ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பீடி இலைகளுடன் இளைஞன் கைது!

புத்தளம், மார்ச். 21

கற்பிட்டியில் சட்டவிரோத பீடி இலைகளுடன் 23 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கற்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளால் வியாழக்கிழமை மதியம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 654 கிலோகிராம் பீடி இலைகள் அடங்கிய 20 பொதிகள் கைப்பற்றப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் சுற்றுலாவுக்கு எரிபொருள் சலுகை கோரிக்கை

## இராதாகிருஷ்ணன் எம்.பி.

கொழும்பு, மார்ச். 21

வசந்த காலத்தில் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட உள்நாட்டவர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ள நுவரெலியா மக்களின் பொருளாதாரம் முழுமையாக ஸ்தம்பிதமடையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய கிழக்கு யுத்தத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "நுவரெலியாவின் முக்கிய பொருளாதாரமாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. ஏப்ரல் வசந்த காலத்தில் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் அன்றி உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் சுமார் 5 இலட்சம் பேர் நுவரெலியாவுக்கு வருகை தருவது வழக்கம். இம்முறை எரிபொருள் பிரச்னையால் அது தடைப்படலாம் என்ற சந்தேகம் எழுகிறது.

அவ்வாறு உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் அங்கு வருவது தடைப்பட்டால் முழு நுவரெலியாவினதும் நுவரெலியா மக்களினதும் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும்."- என்றார்.

உலக முடிவு மலைத்தொடரில்

# செல்பி எடுக்க சென்று தவறி விழுந்த பல்கலை. மாணவி பாதுகாப்பாக மீட்பு

நுவரெலியா, மார்ச். 21

நுவரெலியாவில் அமைந்துள்ள ஹோட்டன் சமவெளி 'உலக முடிவு' சுற்றுலாத் தளத்தில், கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 23 வயது மாணவி ஒருவர் 'செல்பி' எடுக்க முயன்ற போது சுமார் 50 அடி உயரமுள்ள பாறையிலிருந்து தவறி விழுந்தார்.

வியாழக்கிழமை காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், கீழே விழுந்த மாணவி மரக்கிளை ஒன்றில் தொங்கிய நிலையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தை கண்டு கொண்ட ஹோட்டன் சமவெளி தேசிய வனப் பூங்காவின் சாரதி ஒருவர், தனது உயிர் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் கீழிறங்கி, கிளையில் தொங்கிக் கொண்டிருந்த மாணவியை மீட்டு அருகிலிருந்த பாறையில் அமர்த்தியுள்ளார். பின்னர் பட்டிப்பொல பொலிஸார், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, பல மணி நேர மீட்பு நடவடிக்கையின் மூலம் மாணவி பாதுகாப்பாக மீட்கப்பட்டார். (எ)

# திருகோணமலை, மட்டக்களப்பு கடற்பரப்புகளில் இடியுடன் மழை

கொழும்பு, மார்ச். 21

சிலாபத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை மாத்தறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் கிழக்கு திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக் கூடும்.

காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் சாதாரண அலையுடன் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# இலங்கையில் அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளில் மாற்றம்

கொழும்பு, மார்ச். 21

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக இலங்கையில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவிக்கையில்,

"தற்போது ஏற்பட்டுள்ள போர் பதற்ற நிலவரத்தால் சீனி மற்றும் பருப்பு ஆகியவற்றின் மொத்த விலை ஒரு கிலோ கிராமுக்கு 2 முதல் 3 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. போர்ச் சூழல் காரணமாக கப்பல் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளன. இதனால், ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள பொருட்களை கொண்டு வருவதற்கு மேலதிக செலவுகளை சுமக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய நிலையில் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் மொத்த விலையில் கிலோ வுக்கு சுமார் 10 ரூபாய் குறைந்துள்ளது.

தற்போதைய சந்தையில் பொருட்களுக்கான தட்டுப்பாடு இல்லை என்றாலும் பொருட்களின் விலை ஏற்ற இறக்கத்துடனேயே காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வியாபாரிகள் பொருட்களை பதுக்கி வைக்க முயற்சிக்கக் கூடாது. இந்தச் சூழலையும் சமாளிக்க முடியும்."- என்றார். (எ)

# இரு யாசக குழுக்களிடையே காத்தான்குடியில் மோதல்

## இருவர் படுகாயம்! மருத்துவமனையில் அனுமதி

மட்டக்களப்பு, மார்ச். 21

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் இரு யாசக குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

புனித நோன்பு காலத்தில், வெளியூர்களிலிருந்து யாசகம் பெறுவதற்காக அதிகளவிலானோர் காத்தான்குடி பிரதேசத்துக்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் இரவு நேரங்களில் கடைகளின் முன்பாக தங்கியிருந்து, பகல் வேளைகளில் யாசகம் பெற்று வருகின்றனர். அவ்வாறு தங்கியிருந்த இரு யாசக குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியுள்ளது.

இந்த மோதலில் ஈடுபட்டவர்கள் மதுபோதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள் காத்தான்குடி பொலிஸாரின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 500 லீற்றர் எரிபொருளை பதுக்கியவர் சிக்கினார்!

அம்பாந்தோட்டை, மார்ச். 21

அம்பாந்தோட்டை, கட்டுவெவ சல்மல்யாய பகுதியில் சுமார் 500 லீற்றர் எரிபொருளை சேமித்து வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று அதிகாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, வீட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 480 லீற்றருக்கும் அதிகமான டீசல் மற்றும் சுமார் 20 லீற்றர் பெற்றோல் என்பன மீட்கப்பட்டன.

# "ஈழத்தமிழர்கள் தற்போதும் அடிமைகளாகவே உள்ளனர்"

மட்டக்களப்பு, மார்ச். 21

இலங்கைத்தீவு சர்வதேச வல்லரசுகளின் பூகோள ஆதிக்கப் போட்டிக்குள் சிக்குண்டுள்ளதால், அரசுகளாலும் வல்லரசுகளாலும் தமிழர்கள் இன்றும் அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஷ் தெரிவித்தார்.

அன்னை பூபதியின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு- நாவலடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"எந்தவொரு பூகோள ஆதிக்கப் போட்டி நிலவினாலும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தேசம் மற்றும் இறைமை ஆகிய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க எந்தத் தலைமைத்துவம் உறுதியுடன் முன்நிற்கின்றதோ, அந்தத் தலைமைத்துவத்தையே மக்கள் ஆதரிக்க வேண்டும். அதுவே இத்தகைய ஈகங்களுக்குச் செய்யும் உண்மையான மரியாதையாகும்"- என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச விசாரணைகள்...

காணாமலாக்கல் சம்பவங்களில் ஈடுபட்டனர் என்று குறிப்பிட்ட அமைச்சர், அரசு ஒருபோதும் இத்தகைய செயல்களை ஆதரிக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து எந்தவொரு சர்வதேச அமைப்போ அல்லது வெளித்தரப்போ விசாரணை நடத்துவதை அரசு அனுமதிக்காது என்று தெரிவித்த நீதி அமைச்சர், உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

நீதி அமைச்சரின் இந்த விளக்கத்தை ஏற்க முடியாது என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அரசின் நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டித்தார். "காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி வழங்குவதிலும், பொறுப்புக்கூறலிலும் அரசிடம் முறையான அல்லது தெளிவான கொள்கை எதுவும் இல்லை. அமைச்சரின் தரவுகள் முரணாக உள்ளன." - என்று சாணக்கியன் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

## காணாமல்போன...

குறித்த விரிவுரையாளரின் மகளும் அலரது காதலனும் திருகோணமலை - நிலாவெளியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், வீட்டிலிருந்து காணாமல் போன விரிவுரையாளரின் காரும் மீட்கப்லட்டுள்ளதாகவும் பொலீஸ் வட்டாரத்தில் இருந்து அறியக்கிடைத்தது.

எனினும், கைது செய்யப்பட்டவர்களுடன் காணமல் போன விரிவைரையாளரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று குறிப்பிட்ட பொலீஸார் நேற்றிரவு இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை விரிவுரையாளருக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய முடியாமல் இருப்பதாகத் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு வீட்டில் தனித்திருந்த பெண் விரிவுரையாளரும், அவரது மகளும் தொடர்புகளேதும் இன்றிக் காணாமல் போயிருந்தனர். அவர்களது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரும் காணாமல் போயிருந்தது. இது தொடர்பாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் விசாரணகறை மேற்கொண்டிருந்தனர்.

சம்பவத்தின் போது காணாமல் போனதாகக் குறிப்பிடப்பட்ட விரிவுரையாளரின் வங்கி அட்டை கிளிநொச்சியிலுள்ள வங்கி ஒன்றில் பயன்படுத்தப்பட்டதை முதலில் பொலீஸார் கண்டறிந்ததாகவும், தொடர் விசாரணையின்போது விரிவுரையாளரின் காருக்குரிய கியூ ஆர். ஐப் பயன்படுத்தி திருகோணமலைப் பகுதியில் காருக்கு எரிபொருள் நிரப்பியதாகவும் தெரிய வந்தது.

இதனையடுத்து, திருகோணமலைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டதை அடுத்து நிலாவெளியில் வைத்து விரிவுரையாளரின் மகளும் அலரது காதலனும் காருடன் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## சர்வதேச...

வகிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில், எதிர்க்கட்சி தலைவர் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் உரையாற்றிய போதே இந்த கேள்வியை முன்வைத்துள்ளார்.

சர்வதேச சட்டங்களைப் பாதுகாப்பதற்கான முறையான நெறிமுறைச் செயல்முறைகளை அரசாங்கம் பின்பற்றத் தவறியுள்ளமை கண்டனத்திற்குரியது என அவர் சுட்டிக்காட்டினார்.

"சர்வதேச சட்ட மீறல்களைக் கண்டிப்பதற்கு நாம் அஞ்சக்கூடாது" என அவர் இதன்போது வலியுறுத்தினார்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள கடுமையான எரிசக்தி நெருக்கடி மற்றும் ஏனைய பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில், பல்வேறு ஆக்கப்பூர்வமான யோசனைகளை அவர் அரசாங்கத்திடம் முன்வைத்தார்.

தற்போதைய இக்கட்டான சூழலில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்பதையும் அவர் வெளிப்படுத்தினார்.

"மக்களின் நலனுக்காக அரசாங்கம் எடுக்கும் சகல ஆக்கப்பூர்வமான தீர்மானங்களுக்கும் எதிர்க்கட்சியாக நாம் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம்" என அவர் உறுதியளித்தார். எனினும், சர்வதேச விவகாரங்களில் தார்மீகப் பொறுப்புடன் அரசாங்கம் செயற்பட வேண்டியதன் அவசியத்தை அவர் மீளவும் வலியுறுத்தினார். (அ)

## அமெரிக்காவுக்கோ...

முடியும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கின் போர் நிலைமைகள் மற்றும் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்-

சில பாராளுமன்ற உறுப்பினர்களும், சில தரப்பினரும் நாம் குறிப்பிட்ட ஒரு தரப்பிற்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும், சில தீர்மானங்களைச் சரியான நேரத்தில் எடுக்கவில்லை என்றும் பல்வேறு கருத்துகளை முன்வைப்பதை நான் அறிவேன். அவை முற்றிலும் உண்மையற்றவை.

ஈரானியக் கப்பல்கள் தொடர்பான விடயத்தில், குறிப்பாக கடந்த மாதம் 26 ஆம் திகதி ஒத்துழைப்பை மேம்படுத்தும் விஜயமாக 03 கடற்படைக் கப்பல்கள் மார்ச் 09 மற்றும் 13 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தருவதற்கு அனுமதி கோரப்பட்டது. அதற்கான அனுமதியை வழங்குவது குறித்து நாம் ஆராய்ந்து கொண்டிருந்தோம். அதே வேளை, அன்றைய தினம் மாலையில் அமெரிக்கா தனது இரண்டு போர் விமானங்களை இலங்கையின் மத்தளை விமான நிலையத்தில் தரையிறக்க அனுமதி கோரியது. எமது நாட்டின் நடுநிலைத்தன்மை குறித்து நாம் மிகத் தெளிவான முடிவை எடுத்தோம். அந்த நேரத்தில் போர் மோதல்களுக்கான அறிகுறிகள் தென்பட்டிருந்தன. எனவே, நாம் இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும் அனுமதி வழங்கவில்லை. ஈரானியக் கப்பல்களுக்கு ஏன் அனுமதி வழங்கவில்லை எனச் சிலர் கேள்வி எழுப்பினர். அப்படி அனுமதி வழங்கியிருந்தால், எமது ஒட்டுமொத்த நடுநிலைத்தன்மையும் சீர்குலைந்திருக்கும். அத்துடன், எமது பிராந்தியத்திற்கு அப்பால் இருந்த ஒரு போர் மோதல், மத்தளை மற்றும் கொழும்பு துறைமுகத்தை எட்டியிருக்கும். எத்தகைய அழுத்தங்களுக்கு மத்தியிலும் நாம் நாட்டைப் பாதுகாத்தோம்.

அதன் பின்னர் 27ஆம் திகதி, "ஐரிஸ் புஷெஹர்" என்ற கப்பலில் கடற்படை வீரர் ஒருவர் விழுந்து காயமடைந்திருப்பதாகவும், அந்த வீரரையும் அவருடன் ஒரு அதிகாரியையும் இலங்கைக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில் உதவி வழங்குவது எமது நடுநிலைத்தன்மை மற்றும் சர்வதேச உறவுகளின் அடிப்படையுமாகும். அதற்கமைய, குறித்த கப்பல் நிறுவனத்திற்குத் தேவையான விநியோகங்களை மேற்கொள்ளும் நிறுவனத்தின் ஊடாக அந்த அதிகாரியும் கடற்படை வீரரும் கொழும்பு டேடன்ஸ் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

தொடர்ந்து 04ஆம் திகதி, எமது பொருளாதார வலய எல்லைக்குள் ஈரானுக்குச் சொந்தமான கப்பல் ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதாகத் தகவல் கிடைத்தது. இது எமது கடற்பரப்பிற்குள் இடம்பெறவில்லை என்பதால் நாம் இதனைப் புறக்கணித்திருக்க முடியும். இருப்பினும், சர்வதேசக் கடப்பாடுகள் மற்றும் மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு எமது கடற்படையும் விமானப்படையும் பாரிய தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்தன. இவ்வாறான வெடிப்புச் சம்பவங்கள் நிகழும்போது எத்தனை நாட்கள் கண்காணிக்க வேண்டும், அலைகளின் திசைக்கு ஏற்ப எவ்வளவு தூரம் தேட வேண்டும் என்பதற்குச் சர்வதேச தரநிலைகள் உள்ளன. நாம் அவற்றைச் சரியாகப் பின்பற்றினோம். அதன்படி காயமடைந்த 32 பேரையும் 84 சடலங்களையும் எமது நிலப்பரப்பிற்கு மீட்டு வந்தோம். இதுவே எமது மனிதாபிமானமும் நடுநிலைத்தன்மையுமாகும்.

அந்தத் தாக்குதலுக்குப் பிறகு, அவர்களின் மற்றுமொரு கப்பலின் எஞ்சின் பழுதடைந்துள்ளதால் கொழும்பு துறைமுகத்திற்கு வர அனுமதி கோரப்பட்டது. 11 மணித்தியாலங்களுக்கு முன்பே அனுமதி வழங்கியிருக்கலாம் எனச் சிலர் கூறுவதைக் கண்டேன். அங்கு 11 மணித்தியாலங்கள் என்று எதுவும் இருக்கவில்லை. பெப்ரவரி 26 ஆம் திகதி கடிதம் கிடைத்தது மார்ச் 09 ஆம் திகதி வருகை தருவதற்காகவே. இவர்கள் நாட்கள் மற்றும் நேரங்களை குழப்பிக்கொண்டுள்ளனர் என்று நினைக்கிறேன். முதல் கப்பல் தாக்குதலுக்கு உள்ளான பின்னரே, இரண்டாவது கப்பலில் கோளாறு ஏற்பட்டுள்ளதால் கொழும்பு துறைமுகத்திற்கு வர அனுமதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவர்கள் போர் மோதலின் ஒரு தரப்பினர். அவர்கள் எமது கடற்பரப்பிற்குள் நுழையும்போது, சர்வதேசச் சட்டங்களின்படி 24 மணித்தியாலங்கள் மட்டுமே தங்கியிருக்க முடியும். 24 மணித்தியாலங்களுக்குள் அவர்கள் வெளியேற வேண்டும் அல்லது எமது பொறுப்பின் கீழ் வர வேண்டும். அப்போதுதான் எமது நடுநிலைத்தன்மை பாதுகாக்கப்படும். அவர்கள் எமது பொறுப்பின் கீழ் வந்த பிறகு, முழு குழுவினரும் தங்கியிருக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். அதற்கமைய, 206 கடற்படை வீரர்களை எமது கடற்படை முகாமிற்கு அழைத்து வந்தோம். நாம் இந்த 206 பேரையும் ஒன்றாகக் வைத்திருக்கவில்லை. அவர்கள் படையினர், மன அழுத்தத்தில் இருப்பார்கள், என்ன மாதிரியான நிலைமை உருவாகும் என்பதை நாம் அறிவோம். எனவே, மிகுந்த அவதானத்துடன் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் சிகிச்சைகளை வழங்கினோம். நாம் அவர்களை மிகுந்த மனிதாபிமானத்துடன் கவனித்து வருகிறோம். இதன் மூலமே இலங்கை சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தையும் கீர்த்தியையும் பெறுகின்றது." என்று குறிப்பிட்டார்.

மேலும், மத்திய கிழக்குப் போர் நிலைமை தொடர்பில் ஐ.நாவின் தீர்மனத்தில் இலங்கையின் வகிபாகம் குறித்த நிலைப்பாட்டையும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் விளக்கினார்.

அத்துடன், அவர் "சர்வதேச அரங்கில் நாம் எப்போதும் "நீதி மற்றும் நியாயம்" என்ற சுலோகத்தையே முன்வைக்கிறோம். அதன் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டுள்ளோம். அதனால்தான் எமது செயற்பாடுகள், கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் இணக்கப்பாடுகள் என அனைத்திலும் நாம் எமது நடுநிலைமையைப் பேணி வருகிறோம் என்று நான் எப்போதும் கூறுகிறேன். இவ்வாறானதொரு யுத்த காலத்தில், தாய்நாட்டின் தனித்துவம், கௌரவம் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பாதுகாப்பதற்கான வழிமுறை இதுவேயாகும்" என்றார்.

மேலும், "அமெரிக்காவின் இரண்டு விமானங்கள் இம்மாதம் 04 மற்றும் 08 ஆம் திகதிகளில் மத்தளை விமான நிலையத்தில் தரித்து நிற்பதற்கு அனுமதி கோரியிருந்தன. அந்த விமானங்களின் இறக்கைகளில் 8 கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ளதால், இந்தப் போரில் ஒரு தரப்பாக மாறுவதைத் தவிர்க்க முடியாது எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். அது முற்றிலும் பொய்யானது. அந்த ஒப்பந்தத்தில், இவ்வாறானதொரு யுத்தத்தின் போது எமக்கிடையிலான உடன்பாடு குறித்து எவ்வித குறிப்பும் இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ)

## தடையற்ற மின்சாரம்...

பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார். சாதாரண காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளுக்கான விலைகளை விட தற்போது உலகச் சந்தையில் விலைகள் அதிகரித்துள்ளதாகவும், இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற்கொண்டே எதிர்காலத் தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

"எமது பிரதான இலக்கு தடையின்றி மின்சாரத்தை வழங்குவதாகும். அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் பின்பற்றி வருகிறோம். ஒவ்வொரு மாதமும் மின்சார நுகர்வில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சில மாதங்களில் மின்சார நுகர்வு அதிகமாக இருக்கும். நிலக்கரியின் தரம் தொடர்பான சில அறிக்கைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன, அவை குறித்து நாம் ஆராய்வோம். எவ்வாறாயினும், எமது எதிர்பார்ப்பு தடையற்ற மின்சாரத்தை வழங்குவதாகும். உலகச் சந்தையில் நிலக்கரி முதல் அனைத்தும் விலை அதிகரித்துள்ளன. மறுபுறம், இவ்வாறானதொரு சூழலில் நாம் கோரும் டெண்டர்களில் சாதாரண காலங்களில் கிடைக்கும் விலைகள் கிடைப்பதில்லை. எனவே, எண்ணெய் விலையாக இருக்கட்டும் அல்லது மின்சாரக் கட்டணமாக இருக்கட்டும், இவ்வனைத்தையும் உலகச் சந்தை நிலைமைகளைக் கருத்திற்கொண்டே தீர்மானிக்க வேண்டியுள்ளது" எனத் தெரிவித்தார். (அ)

## வடமாகாண...

தற்போதைய நெருக்கடியான புறச்சூழலில் மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் அதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர் நா.வேதநாயகன், எந்தவொரு திணைக்களமும் தமக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதை எக்காரணம் கொண்டும் இடைநிறுத்தக் கூடாது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள விசேட வழிகாட்டல்களைப் பின்பற்றி, நாம் திட்டமிட்ட எமது வழமையான அபிவிருத்திப் பணிகளைத் தடையின்றி முன்னெடுக்க முடியும். தற்போதைய புறச்சூழலைக் காரணம் காட்டி, அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் அதிகாரிகள் எந்தவொரு தயக்கத்தையும் காண்பிக்கத் தேவையில்லை.

ஏற்கனவே திட்டமிடப்பட்டவாறு அனைத்துப் பணிகளையும் விரைவுபடுத்துங்கள். பல திணைக்களங்கள் தமது வேலைகளுக்கான கேள்வி மனுக்களை கோரியுள்ளன.

எஞ்சியுள்ள வேலைகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுப் பணிகளையும் விரைந்து நிறைவுசெய்து, அவற்றுக்கான கேள்வி மனுக்களை உடனடியாகக் கோருவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆளுநர் பணித்தார்.

இதனைத் தொடர்ந்து, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் தற்போது கள மட்டத்தில் தாங்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் நிலைமைகள் குறித்து ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

குறிப்பாக, எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில், குறிப்பாகப் பின்தங்கிய பிரதேசங்களுக்குக் களப் பயணங்களை மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் அலுவலர்களுக்குப் போதியளவு எரிபொருள் கிடைப்பதில் சிக்கல்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்தங்கிய பிரதேசங்களில் மிகக் குறைந்தளவான எரிபொருள் நிரப்பு நிலையங்களே காணப்படுவதால், கடமையிலீடுபடும் உத்தியோகத்தர்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் நடைமுறை இடர்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. திணைக்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட இக்கருத்துக்களை உள்வாங்கிய ஆளுநர், அத்தியாவசியக் களப் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் விநியோகச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, அந்தந்த மாவட்ட செயலாளர்களுடன் ஒருங்கிணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (அ)

## ஜனாதிபதி - மனோ...

குற்றம்சாட்டியது" என்று ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதியின் இந்த கருத்தை மனோ கணேசன் எழுந்து நின்று மறுத்தார். அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, பாராளுமன்றத்திற்கு வெளியேயும் எதிர்க்கட்சி இருப்பதாக குறிப்பிட்டார். யாரையும் பெயர் குறிப்பிடாமல், பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ள சிலர் ஊடக மாநாட்டில் அரசை விமர்சித்ததாகவும், அப்போது மனோ கணேசனும் அங்கே இருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதற்கு மனோ கணேசன், அது ஒரு (அரசியல்) கூட்டணி அல்ல. மாறாக அது ஒரு (அரசியல்) பொது மேடை என விளக்கமளித்தார். இருப்பினும், எதிர்க்கட்சி பாராளுமன்றத்திற்குள் மட்டுமல்லாது, வெளியிலும் இருப்பதாக ஜனாதிபதி தொடர்ந்து வலியுறுத்தினார். ஜனாதிபதி அநுர குமார - மனோ கணேசன், ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற இந்த கருத்து பரிமாற்றத்தின்போது, எதிர்க்கட்சி தலைவர் சஜித் மற்றும் பெரும்பாலான எதிர்க்கட்சித் எம்.பிக்களும் சபையில் இருந்தனர். (அ)

## கலைப்பீட...

சபையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.இரகுராமின் பதவிக்காலம் கடந்த ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்த போதிலும், இலங்கை பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் காரணமாக - திருத்தச் சட்டம் செயற்பாட்டுக்கு வரும் வரையில் பல்கலைக்கழகங்களில் பீடாதிபதி தெரிவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் திருத்தம் 2026 ஃ2 கடந்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என பல்கலைக்கழக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கலைப் பீடாதிபதி தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பீடாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

நேற்றைய தெரிவின் போது, கலைப் பீடச்சபை உறுப்பினர்கள் வாக்களித்தனர். பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா 27 மேலதிக வாக்குகளைப் பெற்று பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ)

## வட்டுக்கோட்டை...

காரைநகர் வைத்தியசாலைக்கு வழங்கியமை, வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகள் போன்றவற்றுக்கு தீர்வு கோரி இந்த போராட்டமானது நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே குறித்த போராட்டத்தில், அந்த வைத்தியசாலையை பயன்படுத்தும் அனைத்து தரப்பினரையும் இணையுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (அ)

## அத்தியாவசிய...

பெரிய வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கே இவ்வாறு விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அகதிகள் பிரச்சனையை அரசியல்மயமாக்காதீர்!

## இந்தியாவிடம் இலங்கை வேண்டுகோள்



புதுடில்லி, மார்ச் 21

உள்நாட்டுப் போரின்போது நாட்டை விட்டு வெளியேறி, தற்போது தமிழ்நாட்டில் அகதிகளாக வசித்துவரும் அனைவரையும் ஏற்றுக்கொண்டு ஆதரவளிக்க இலங்கை தயாராக உள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க 'தி இந்து' பத்திரிகையிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை அகதிகளை தங்களது "அரசியல் பிரசாரத்திற்கான ஒரு கருவியாக" பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் இந்திய மற்றும் தமிழ்நாடு அரசுகளை அவர் வலியுறுத்தினார்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான பிரச்னைகளில் மத்திய அரசின் தலையீட்டைக் கோரி, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு 2026 பெப்ரவரி 15 கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதைத் தடுக்கும் நிர்வாக உத்தரவுகளை இரத்து செய்யுமாறு புதுடில்லியைக் அந்தக் கடிதத்தில் கோரியதோடு, தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சரிபார்க்கப்பட்ட அடையாள ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்படும் குடியுரிமை அல்லது நீண்ட கால விசா விண்ணப்பங்களுக்கு, பொருத்தமான இடங்களில் கடவுச்சீட்டு மற்றும் விசா தேவைகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஸ்டாலின் ஒரு நிர்வாக விளக்கத்தைக் கோரியிருந்தார்.

ஸ்டாலினின் கடிதத்தின்படி, தமிழ்நாடு முழுவதும் முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் சுமார் 89,000 இலங்கை அகதிகள் வசித்து வருகின்றனர்.

அவர்களில் கிட்டத்தட்ட 40 வீதம் பேர் அங்கேயே பிறந்தவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாட்டிலிருந்து அகதிகளாகத் திரும்புவோர் குறித்து இலங்கை அரசின் தற்போதைய நிலைப்பாடு பற்றிக் கேட்கப்பட்டபோது அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

2009 மே மாதம் உள்நாட்டுப் போர் முடிவடைந்தது முதல் 2025 ஜூன் வரையிலான 16 ஆண்டு காலப்பகுதியில், தமிழ்நாட்டிலிருந்து 18,542 பேர் இலங்கைக்குத் திரும்பியதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், நாடு திரும்ப விரும்பும் எவரையும் வரவேற்பதற்கு நாங்கள் நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம்.

எனினும், அவர்களில் சிலர், இந்தியாவில் பிறந்தவர்கள், அல்லது பல தசாப்தங்களாக அங்கு வாழ்ந்து, படித்து, பணியாற்றியவர்கள், அல்லது ஒரு இந்தியரைத் திருமணம் செய்தவர்கள், இந்தியக் குடியுரிமை கோர முடிவு செய்தால், அந்த நிலைப்பாட்டை எங்களால் மறுக்க முடியாது.

அங்கு குடியுரிமை கோருவது அவர்களின் யதார்த்தமும் உரிமையும் ஆகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்தியாவில் உள்ள அரசியல்வாதிகளுக்கு அவர் விடுத்த செய்தியில், இந்திய அரசாங்கத்திற்கும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், தயவுசெய்து அகதிகளைத் தேர்தல்களைச் சுற்றியுள்ள அரசியல் பிரசாரத்திற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டாம்.

அவர்கள் ஏற்கனவே பெரும் துன்பத்தை அனுபவித்துள்ளனர் அவர்களின் கோரிக்கையை நாம் கவனத்துடனும் உணர்வுப்பூர்வமாகவும் கையாள வேண்டும் என்று வலியுறுத்தினார். (அ)

# எரிபொருள் நெருக்கடி காரணமாக சுகாதார பரிசோதகர்கள் சிரமத்தில்!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் நிலவிவரும் எரிபொருள் நெருக்கடியால் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கடுமையான சிரமங்களைச் சந்தித்து வருவதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு சங்கம் அனுப்பிய கடிதத்தில், களப்பணிகளை மேற்கொள்ளும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் எந்தவொரு சிறப்பு எரிபொருள் ஒதுக்கீடும் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்திற்காகச் செயல்படுத்தப்பட்ட கியூ.ஆர். அடிப்படையிலான முறைக்கும் சங்கம் தனது பாராட்டைத் தெரிவித்தது.

எனினும், தாமதமின்றி அல்லது வரிசைகளில் காத்திருக்காமல், முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை இல்லாதது, அதன் உறுப்பினர்களுக்கு ஒரு பெரும் பிரச்னையாக மாறியுள்ளது என்று சங்கம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியது.

இந்த சூழ்நிலை காரணமாக, தொற்றுநோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துதல், வியாபாரிகளை சோதனை செய்தல் மற்றும் பாடசாலை சுகாதார சேவைகளை வழங்குதல் போன்ற அத்தியாவசியப் பணிகள், தேவைப்படும் காலக்கெடுவிற்குள் நிறைவேற்றப்படாமல் போகும் அபாயம் உள்ளது என்றும் தொழிற்சங்கம் வலியுறுத்தியது. (அ)

# 5 கோடி ரூபாய் பெறுமதியான "குஷ்" போதைப்பொருள் மீட்பு!

## வர்த்தகர் ஒருவர் கைது!!

கொழும்பு, மார்ச் 21

சுமார் 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான "குஷ்" ரக போதைப்பொருள் தொகையை இலங்கைக்கு கடத்தி வந்து, அதனை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்ல முயன்ற இலங்கை வர்த்தகர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினால் அவர் கைது செய்யப்பட்டார்.

மூதூர் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் குறித்த போதைப்பொருள் தொகையை தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கொள்வனவு செய்து, அதனை அங்கிருந்து இந்தியாவின் பெங்களூர் நகருக்குச் கொண்டுச் சென்றுள்ளார்.

பின்னர் பெங்களூரிலிருந்து நேற்று அதிகாலை அவர் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் கொண்டு வந்த இரண்டு பயணப் பொதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# துமிந்த சில்வாவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, மார்ச் 21

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு கொழும்பு நீதவான் அசங்க எஸ். போதாகம நேற்று வெள்ளிக்கிழமை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டார்.

தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலுள்ள துமிந்த சில்வாவிடம், எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10 மணியளவில் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன், குறித்த வாக்குமூலம் பதிவு செய்யப்படும்போது துமிந்த சில்வா சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாவதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியை உடன் கட்டுப்படுத்துங்கள்

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 21

வடபகுதிக் கடற்பரப்புக்களில் தற்போது வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, டைனமெற் வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளும், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளதால் வடபகுதி மீனவர்கள் நொந்து போயுள்ளதாகத் தெரிவித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 25ஆளணியில், 15ஆளணி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாதிருப்பதையும் சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர், கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைகளையும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற உலகில் தற்போது நிலவும் நிலைமை தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக்காலமாக மிக மோசமான வகையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பிட்ட சில சட்டவிரோதிகள் இவ்வாறு பாரிய அளவில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்வதால், கடற்றொழிலே கதி என்று இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அதேவேளை இந்திய இழுவைப்படகுகள் எமது கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்வதால் எமது மீனவர்களின் சீரான கடற்றொழில் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், கடற்றொழில் உபகரணங்களும் சேதப்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதிக் கடற்பரப்புக்கள் உள்ளூர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் பலத்த பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றன.

வடக்கு, கிழக்கு கடற்பரப்புக்களை சட்டவிரோதிகளின் கைகளில் விட்டுவிடாமல் காப்பாற்றுங்கள் என்றுதான் நேர்மையான, உண்மையான மீனவர்களின்சார்பாக இந்த உயரிய சபையைக் கோருகின்றேன் - என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.